# பரீட்சகரின் அறிக்கை

## மட்டம் III பரீட்சை – 2021 யூலை

## (303) நிதிக் கட்டுப்பாடுகளும் கணக்காய்வும்

(303) நிதிக் கட்டுப்பாடுகளும் கணக்காய்வும் வினாத்தாளானது 9 கட்டாய வினாக்களைக் கொண்டுள்ளது. இந்த வினாத்தாளில் 3 பகுதிகள் காணப்படுகின்றன. பகுதி A ஆனது ஒவ்வொன்றும் 5 புள்ளிகளைக் கொண்ட 4 கட்டாய வினாக்களை உள்ளடக்கியுள்ளதுடன் பகுதி B ஆனது ஒவ்வொன்றும் 10 புள்ளிகளைக் கொண்ட 3 கட்டாய வினாக்களையும் பகுதி C ஆனது ஒவ்வொன்றும் 25 புள்ளிகளைக் கொண்ட 2 கட்டாய வினாக்களையும் உள்ளடக்கியுள்ளது.

பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாத்தாளில் தரப்பட்ட சகல வினாக்களுக்கும் விடை அளித்திருந்தனர். எவ்வாறாயினும், விடையளிக்கப்படாதிருந்த வினாக்களின் சில பகுதிகளும் காணப்பட்டன. இது பிரதானமாக மோசமான நேர முகாமைத்துவம், போதிய அறிவின்மை மற்றும் வினாவில் என்ன கேட்கப்பட்டுள்ளது என்பதைப் புரிந்து கொள்ளாமை போன்றவற்றால் ஏற்பட்டதாகும்.

**ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.**

## பகுதி A

### வினா இல. 01

இவ்வினா முற்றிலுமாக உறுதிப்பாட்டு ஈடுபடுத்தலை அடிப்படையாகக் கொண்டிருந்தது.

வினாவின் **பகுதி (a)** ஆனது நியாயமான உறுதிப்பாட்டு ஈடுபடுத்தல் மற்றும் வரையறுக்கப்பட்ட உறுதிப்பாட்டு ஈடுபடுத்தல் ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாடுகள் குறித்த பரீட்சார்த்திகளின் அறிவைப் பரீட்சித்திருந்தது.

இந்த வினா மிகவும் நேரடியானதாக இருந்ததுடன் நேரடியான விடைகள் அளிக்கப்படக்கூடியவை. ஒரு சிலரைத் தவிர, ஏனைய சகல பரீட்சார்த்திகளும் சராசரி அளவான புள்ளிகளைப் பெற்றிருந்தனர். சில பரீட்சார்த்திகள் **பகுதி (a)** இற்கு சம்பந்தமற்ற விடைகளை வழங்கியிருந்தனர்.

வினாவின் **பகுதி (b)** இன் கீழ், சட்டநியதிக் கணக்காய்வு தவிர்ந்த உறுதிப்பாட்டு ஈடுபடுத்தல் களுக்கான வேறு உதாரணங்களைக் குறிப்பிடுமாறு பரீட்சார்த்திகள் கேட்கப்பட்டிருந்தனர்.

சில பரீட்சார்த்திகள் சட்டநியதிக் கணக்காய்வு என மீண்டும் குறிப்பிட்டிருந்ததால் புள்ளிகளைப் பெற்றிருக்கவில்லை. பாடப் புத்தகத்தில் ஏழிற்கும் மேற்பட்ட உதாரணங்கள் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. இது அதிகமான பரீட்சார்த்திகள் பாடப்புத்தகத்தைப் படிப்பதில் கூடிய கவனம் செலுத்தவில்லை என்பதைக் காட்டுகிறது.

இந்த வகையான வினாக்களுக்கு திருப்திகரமான புள்ளிகளைப் பெற்றுக் கொள்வதற்கு பின்வரும் பகுதிகளில் பரீட்சார்த்திகள் தங்களது அறிவை மேம்படுத்திக் கொள்ள வேண்டும்.

1. உறுதிப்பாட்டு ஈடுபடுத்தல் என்றால் என்ன?
2. உறுதிப்பாட்டு ஈடுபடுத்தல்களின் வகைகள்
3. நியாயமான மற்றும் வரையறுக்கப்பட்ட உறுதிப்பாட்டு ஈடுபடுத்தல்களுக்கிடையிலான வேறுபாடு

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.**

## வினா இல. 02

இவ்வினாவில் செயன்முகமைக் கோட்பாடு மற்றும் முகவராண்மைக் கோட்பாடு ஆகியன பற்றிய அறிவு பரீட்சிக்கப்பட்டது.

பெரும்பாலான பரீட்சார்த்திகள் என்ன கேட்கப்பட்டுள்ளது என்பதை விளங்கிக் கொள்ளவில்லை. இதனால் சரியான விடை வழங்கப்படாது குறைந்தளவு புள்ளிகளையே பெற்றிருந்தனர்.

இந்தக் கோட்பாடுகள்கூட பாடப்புத்தகத்தில் தெளிவாக விளங்கப்படுத்தப்பட்டுள்ளன. பரீட்சார்த்திகள் இத்தகைய கோட்பாட்டு ரீதியிலான விடயங்கள் மற்றும் தொடர்புகள் பற்றி தெளிவான விளக்கத்தைக் கொண்டிருக்க வேண்டும். ஏனெனில் கணக்காய்வின் வகிபாகமானது பணிப்பாளர்கள் கம்பனியின்பால் சிறந்த நாட்டத்துடன் செயற்படுவதையும் செயன்முகமை வகிபாகத்தை வகிப்பதையும் உறுதிப்படுத்துவதற்கு பங்குதாரர்களுக்கான ஒரு பொறிமுறையை வழங்குகிறது.

சில பரீட்சார்த்திகள், கணக்காய்வாளர் கடமை புரிய இயலாதபோது முகவர் அவரது கடமைகளை ஆற்றுகிறார் என்பது போன்ற சம்பந்தமற்ற விடைகளை அளித்திருந்தனர்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் காணப்படவில்லை.**

## வினா இல. 03

வணிக நிறுவனங்கள் தமது வணிகங்களை மேற்கொள்ளும்போது பல சவால்களையும் இடர்களையும் எதிர்கொள்கின்றன. கோவிட் 19 நோய்ப் பரவல் காரணமாக இடர்கள் அதிகரித்திருந்ததுடன் விசேடமாக பொழுதுபோக்குத் துறையை அது பெரிதும் பாதித்திருந்தது.

பொழுதுபோக்குத் துறையில் செயற்படுகின்ற AB PLC இன் செயற்பாடு மற்றும் இணக்க இடர்களை மதிப்பிடுமாறு இவ்வினா கேட்டிருந்தது.

செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டதுடன் மோசமான செயலாற்றுகைக்கான காரணங்களாக கீழ்வருவன காணப்பட்டன :

- செயற்பாடு மற்றும் இணக்க இடர்களை விபரிக்க முடியாமை
- இடர் மட்டத்தை மதிப்பிடுவதற்கான திறனின்மை
- பொருத்தமற்ற உதாரணங்களை முன்வைத்தமை

இவ்வினாவுக்கு விடையளிக்கும்போது ‘‘முடக்க நிலை, பரிமாற்றக் கட்டுப்பாடுகள், முகக் கவசங்களை அணிதல், குறைந்தபட்ச இடைத்தூரத்தைப் பேணுதல் போன்ற’’ பொழுதுபோக்குத் துறைக்கான கோவிட் 19 நோய்த் தொற்றிலிருந்தான பல உதாரணங்களைப் பயன்படுத்த முடியும்.

பரீட்சார்த்திகள் அத்தகைய இடர்களைத் தணிப்பதில் பயன்படுத்தப்படுகின்ற உள்வாரியான மற்றும் வெளிவாரியான இடர்கள், இடர் முகாமைத்துவ வேலைச் சட்டகம் மற்றும் நுட்பங்கள் ஆகியன பற்றிய தமது அறிவை மேம்படுத்திக் கொள்ள வேண்டும்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்படவில்லை.**

**வினா இல. 04**

தனித்தனிக் கணக்காய்வு ஈடுபடுத்தல் மட்டத்தில் ஆற்றப்பட வேண்டிய தரக் கட்டுப்பாட்டு நடைமுறைகள் பற்றிய அறிவை இவ்வினா பரீட்சித்திருந்தது. தனித்தனி ஈடுபடுத்தல் மீதான தரக் கட்டுப்பாட்டிற்காக கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய மூன்று கொள்கைகளும் நடைமுறைகளும் காணப்படுகின்றன. அவையாவன; ஈடுபடுத்தல் செயற்பாடு, மேற்பார்வை மற்றும் மீளாய்வுத் தரத்தின் நிலைப்புத்தன்மை.

இவ்வினாவின் **பகுதி (a)** ஆனது ஈடுபடுத்தல் செயற்பாட்டுத் தரத்தின் நிலைப்புத்தன்மையைப் பேணுவதில் கவனிக்கப்பட வேண்டிய விடயங்களைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது.

பெருமளவான பரீட்சார்த்திகள் தரக் கட்டுப்பாடு பற்றித் தமக்குத் தெரிந்த நடைமுறைளைக் குறிப்பிட்டிருந்ததுடன் எவ்வித புள்ளிகளையும் பெற்றிருக்கவில்லை.

இவ்வகையான வினாக்களுக்கு புள்ளிகளைப் பெற வேண்டுமாயின் பரீட்சார்த்திகள் கீழ்வருவன பற்றிய தெளிவான விளக்கத்தைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும் :

- நிறுவனத்திற்கான தரக் கட்டுப்பாட்டு முறைமையின் கூறுகள்
- தனித்தனி கணக்காய்வுக்குப் பொருத்தமான தரக் கட்டுப்பாட்டுத் தேவைப்பாடுகள்
- கொள்கைகளும் நடைமுறைகளும் மற்றும் தரக் கட்டுப்பாட்டின் ஒவ்வொரு கூறிற்காகவும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயங்களும்

வினாவின் **பகுதி (b)** ஆனது பணித் தாள்களை மீளாய்வு செய்யும்போது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயங்களைப் பரீட்சித்திருந்தது.

பெரும்பாலான பரீட்சார்த்திகள் இரண்டு பகுதிகளுக்கும் விடையளித்திருந்ததுடன் சராசரியான அளவு புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் இருந்தது.**

## <u>பகுதி B</u>

**வினா இல. 05**

நெறிமுறை நடத்தை என்பது ஒரு தொழில்சார் அம்சமாக இருப்பதால் கணக்காய்வாளர் நெறிமுறை நடத்தைக் கோவையுடன் இணக்கமாகச் செயற்படுதல் வேண்டும்.

வினாவின் **பகுதி (a)** ஆனது தரப்பட்ட விவரணத்துடன் தொடர்புடைய நெறிமுறையின் அடிப்படைக் கோட்பாடுகளுடன் இணங்குவதற்கான மூன்று அச்சுறுத்தல்களை விபரிக்குமாறு கேட்டிருந்தது.

பெரும்பாலான பரீட்சார்த்திகள் சம்பந்தப்பட்ட கோட்பாடுகளுடன் தொடர்புபடுத்தாது விவரணத்தில் தரப்பட்ட அச்சுறுத்தல்கள் பற்றி விபரித்திருந்தனர். சில பரீட்சார்த்திகள் சுய மீளாய்வை அச்சுறுத்தலாக இனங்கண்டிருந்தனர் எனினும் அது விவரணத்திற்குப் பொருத்தமற்றதாக இருந்ததால் புள்ளிகள் எதனையும் பெறவில்லை.

வினாவின் **பகுதி (b)** ஆனது இனங்காணப்பட்ட அச்சுறுத்தல்களைக் குறைப்பதற்கு **சுராஜ் அன்ட் கம்பனியால்** நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய நிறுவன ரீதியான பாதுகாப்பு நடவடிக்கைகளைக் குறிப்பிடும்படி கேட்டிருந்தது. பாடப்புத்தகத்தில் நிறுவனமொன்றினால் பின்பற்றப்பட வேண்டிய பல பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகள்

பாதுகாப்பு நடவடிக்கைகளைச் சரியாகக் குறிப்பிட்டிருந்தனர். சிலர் குறிப்பிட்ட பாதுகாப்பு நடவடிக்கைகளை ஈடுபடுத்தலுடன் சேர்த்து குழப்பியிருந்தனர்.

ஒட்டுமொத்தத்தில், கீழ்வரும் பகுதிகளில் தெளிவான விளக்கத்தைக் கொண்டிருக்க வேண்டுமென பரீட்சார்த்திகளுக்கு ஆலோசனை வழங்கப்படுகிறது :

- தொழில்சார் ஒழுக்கநெறியின் அடிப்படைகள்
- புதிய சேவைநாடுநரை ஏற்றுக்கொள்வதில் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள்
- அடிப்படைக் கோட்பாடுகளுடன் இணங்குவதற்கான அச்சுறுத்தல்கள்
- அச்சுறுத்தல்களைக் குறைப்பதற்கு / நீக்குவதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகள்
- கணக்காய்வாளரின் சுயாதீன எண்ணக்கரு.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் இருந்தது.**

## வினா இல. 06

வினாவின் **பகுதி (a)** ஆனது கணக்காய்வை ஆரம்பிப்பதற்கு முன்னர் தொடக்கநிலைக் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வு முகாமையாளரால் ஆற்றப்பட வேண்டிய திட்டவட்டமான நடைமுறைகளை விபரிக்குமாறு கேட்டிருந்தது.

பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளித்திருந்தனர். எவ்வாறாயினும், அவர்கள் தொடக்கநிலை கணக்காய்வை ஏற்றுக்கொள்வதற்கான நடைமுறைகள் அதேபோன்று ஒரு புதிய முகாமையாளரின் தொடக்கநிலைக் கணக்காய்வுத் திட்டமிடலின் படிமுறைகள் அல்லது திட்டமிடல் பற்றி விடையளித்திருந்தனர். அத்துடன் சில பரீட்சார்த்திகள் விசாரணை, அவதானிப்பு, பகுப்பாய்வு நடைமுறை, வெளிவாரி உறுதிப்படுத்தல் போன்ற பொதுவான கணக்காய்வு நடைமுறைகளைக் குறிப்பிட்டிருந்ததால் புள்ளிகளைப் பெறவில்லை.

**செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் காணப்படவில்லை.**

வினாவின் **பகுதி (b)** மற்றும் **(c)** ஆகியன கணக்காய்வு ஆவணப்படுத்தல் பற்றியதாகக் காணப்பட்டது. இதற்கான செயலாற்றுகை சராசரி மட்டத்தில் இருந்தது.

**பகுதி (c)** இற்கு பல பரீட்சார்த்திகள் பணித்தாள்களிலுள்ள தகவல்களுக்குப் பதிலாக கணக்காய்வாளர் அறிக்கையிலுள்ள தகவல்களைக் குறிப்பிட்டிருந்தனர். (உதாரணம்: கணக்காய்வாளர்களின் பெயர், முகவரி, அபிப்பிராயம், கையொப்பம்)

பரீட்சார்த்திகள் கணக்காய்வுத்தாள் ஆவணப்படுத்தல் பற்றி தெளிவான கருத்து எதனையும் கொண்டிருக்காததுடன் பொதுவான விடைகளை அளித்திருந்தனர்.

**இந்த வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் காணப்பட்டது.**

**வினா இல. 07**

வினாவின் **பகுதி (a)** ஆனது **வரையறுக்கப்பட்ட ராமா கம்பனியின்** கணக்காய்விலிருந்து கண்டறியப்பட்டவை தொடர்பில் கணக்காய்வாளர் தொடர்பாட வேண்டிய விடயங்களை விபரிக்குமாறு கேட்டிருந்தது. பரீட்சார்த்திகள் தரப்பட்ட விவரணத்தில் காணப்பட்ட விடயங்களை மீண்டும் விபரமாகக் கூறி இலகுவாக முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். இந்தப் பகுதிக்கான செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்ததுடன் சில பரீட்சார்த்திகளிடம் வினாவில் என்ன கேட்கப்பட்டது என்பது பற்றி புரிந்து கொள்வதற்கான திறனின்மையால் பிரதானமாக கடந்தகால வினாத்தாள்களைப் படித்து விடையெழுதிப் பயிற்சிபெறாமையால் அவர்களால் வெற்றிகரமாக விடை அளிக்க முடியவில்லை.

**பகுதி (b)**

இந்தப் பகுதியானது கணக்காய்வுச் சான்றிலிருந்து பெறப்பட்ட முடிவுகளின் மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு நிதிக் கூற்றுக்கள் மீதான அபிப்பிராயம் ஒன்றை உருவாக்குகின்ற பரீட்சார்த்திகளின் அறிவைப் பரீட்சித்திருந்தது. இங்கு கணக்காய்வு அபிப்பிராயத்தின்மீதான கண்டறிதல்களின் கீழ் உள்ளடக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தை மதிப்பிடுமாறு கேட்கப்பட்டது.

LKAS 23 இன்படி, தகைமைச் சொத்துகளுக்கு நேரடிக் காரணமான கடன்படுகைக் கிரயமானது மூலதனமாக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், இது வருமான கூற்றில் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. எனவே, கணக்காய்வாளர் இவ்விடயம் பற்றி முகாமையுடன் கலந்துரையாடுதல் வேண்டும். அவர்கள் அதனை சீராக்குவதற்கு இணங்காதுவிடின், கணக்காய்வு அபிப்பிராயம் அதற்கேற்றாற்போல் மாற்றப்பட வேண்டும். இந்தப் பகுதிக்கான செயலாற்றுகை மிகவும் மோசமானதாக இருந்தது.

மோசமான செயலாற்றுகைக்கு காரணமாக அமைந்தவை கீழ்வருமாறு :

- தொடர்புடைய கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் பற்றிய அறிவு போதாமை
- கணக்காய்வு அபிப்பிராயத்தின் மீதான கணக்காய்வாளரின் கண்டறிதல்களின் தாக்கத்தை மதிப்பிடுதல்
- பொருத்தமான அபிப்பிராயத்தை உருவாக்குவதற்கான இயலாமை
- பொருண்மையின் முக்கியத்துவத்தையும் கணக்காய்வாளரின் அபிப்பிராயம் மீது அதன் தாக்கத்தையும் இனங்காணாமை.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் இருந்தது.**

## <u>பகுதி C</u>

**வினா இல. 08**

இந்த வினா விடய ஆய்வை அடிப்படையாகக் கொண்ட வினாவாகும். இங்கு வணிகச் செயன்முறைகள், உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் IT கட்டுப்பாடுகள் பற்றிப் பரீட்சிக்கப்பட்டது. தரப்பட்ட விவரணத்தில் காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளை இனங்காணுதல், பலவீனங்களை இனங்காணுதல் என்பன பரீட்சார்த்திகளிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டன.

**<u>பகுதி (a)</u>**

**வரையறுக்கப்பட்ட மலாகா (தனியார்) கம்பனியால்** சரியாக வடிவமைக்கப்படாத கட்டுப்பாட்டு நடவடிக்கை மூலகங்கள் 03 இனை ஒவ்வொரு உள்ளகக் கட்டுப்பாட்டுப் பலவீனங்களுக்குமான உதாரணங்களுடன் ஏற்பிசைவு செய்யுமாறு கேட்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் தொடர்புடைய கட்டுப்பாட்டு நடவடிக்கை மூலகங்களை ஏற்பிசைவு செய்யாது உதாரணங்களை வழங்கியிருந்தனர். இது உள்ளகக் கட்டுப்பாடுகளின் கோட்பாட்டு ரீதியான அம்சங்கள் மீதான பரீட்சார்த்திகளின் போதிய அறிவின்மையைக் காட்டுகிறது.

**<u>பகுதி (b)</u>**

இந்தப் பகுதியானது **பகுதி (a)** இல் ஏற்பிசைவு செய்யப்பட்ட பலவீனங்களை நிவர்த்தி செய்வதற்கான பரிந்துரைகளைக் குறிப்பிடுமாறு கேட்டிருந்தது.

வெற்றிகரமான முறையில் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளின் மூலகங்களை ஏற்பிசைவு செய்திருந்த பரீட்சார்த்திகள் இப்பகுதிக்கு விடையளித்து உயர்ந்தளவு புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

**செயலாற்றுகை சராசரி மட்டத்தில் இருந்தது.**

**<u>பகுதி (c)</u>**

நிறுவனமொன்றினுள் உள்ளகக் கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்துவதன் மூன்று நன்மைகளை விபரிக்குமாறு பரீட்சார்த்திகள் கேட்கப்பட்டிருந்தனர். பாடப்புத்தகத்தில் விபரமான விளக்கங்களுடன் பல நன்மைகள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதிகளவான பரீட்சார்த்திகள் பொதுவான அனுகூலங்களை வழங்கியிருந்ததால் முழுமையான புள்ளிகளைப் பெற முடியாது போயிருந்தது. சில பரீட்சார்த்திகள் விடயங்களைத் துல்லியமாகக் குறிப்பிட்டிருந்தனர் ஆயினும் வேறுபட்ட சிந்தனைகளை விளக்கியிருந்தனர். அத்துடன், சில பரீட்சார்த்திகள் நன்மதிப்பு அதிகரித்தல், வெளிப்படைத்தன்மை, ஊழியர் முரண்பாடுகளைத் தீர்த்தல், பணியாளர் ஒழுக்கம் போன்ற சம்பந்தமற்ற விடைகளை விபரித்திருந்தனர். எனவே, பரீட்சார்த்திகள் பாடப்புத்தகத்திலுள்ள இந்தப் பகுதி மீது போதுமான கவனத்தைச் செலுத்துமாறு வேண்டப்படு கின்றனர். ஏனெனில் இந்த அத்தியாயம் அதிக கவனத்திற்குரியது என்பதால் ஒவ்வொரு ஆண்டும் குறிப்பிடத்தக்களவு சதவீதமான புள்ளிகள் இதற்கு ஒதுக்கப்படுகின்றன.

**எவ்வாறாயினும், செயலாற்றுகை சராசரி மட்டத்தில் இருந்தது.**

**<u>பகுதி (d)</u>**

இங்கு சம்பளப் பட்டியல் முறைமையிலுள்ள சம்பளப் பட்டியலிடல் செயன்முறையின் படிமுறைகளைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டது. இது புள்ளிகளைப் பெறுவதற்கான இலகுவான ஒரு வினாவாக இருந்தது.

எவ்வாறாயினும், பல பரீட்சார்த்திகள் வரவுப் பதிவு, செயன்முறையில் எவ்வித பாய்வுமின்றி கொடுப்பனவுகளை மேற்கொள்ளுதல் போன்ற சம்பளப் பட்டியல் முறைமை ஒன்றிலுள்ள படிமுறைகளை வெறுமனே குறிப்பிட்டிருந்தனர்.

மிகச் சில பரீட்சார்த்திகளே சம்பளப் பட்டியல் முறைமையின் படிமுறைகளை ஒழுங்குமுறையில் குறிப்பிட்டு முழுமையான புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

**பகுதி (e)**

நிகழ்ச்சித்திட்டங்களுக்கான அதிகாரமளிக்கப்படாத மாற்றங்களைக் கண்டுபிடிப்பதற்கு அல்லது தடுப்பதற்கு நடைமுறைப்படுத்தக்கூடிய கட்டுப்பாடுகளையும் தரவுக் கோப்புக்கு அதிகாரமளிக்கப் படாத திருத்தங்களைத் தடுப்பதற்கு நடைமுறைப்படுத்தக்கூடிய கட்டுப்பாடுகளையும் பட்டியலிடுமாறு கேட்கப்பட்டது.

செயலாற்றுகை சராசரி மட்டத்தில் இருந்தது. சில பரீட்சார்த்திகள் கீழ்வருவன போன்ற சம்பந்தமற்ற விடைகளை வழங்கியிருந்தனர் ;

- உள்ளீட்டுக் கட்டுப்பாடுகள்
- வெளியீட்டுக் கட்டுப்பாடுகள்
- செயன்முறைக் கட்டுப்பாடு

சில பரீட்சார்த்திகள் நிகழ்ச்சித்திட்டங்கள் அல்லது தரவுக் கோப்பைத் தொடர்புபடுத்தாது கட்டுப்பாடுகளைக் குறிப்பிட்டிருந்தனர். இது கட்டுபாடுகள் பற்றி பரீட்சார்த்திகளிடம் குறைவான அறிவு காணப்படுவதையே காட்டுகிறது.

**வினாவின் இந்தப் பகுதிக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.**

**வினா இல. 09**

இந்த வினாவும்கூட 25 புள்ளிகளைக் கொண்ட விவரணத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு வினாவாகும். இந்த வினா கீழ்வரும் பகுதிகளில் பரீட்சார்த்திகள் கொண்டுள்ள அறிவைப் பரீட்சித்திருந்தது :

1. இடரான பகுதிகளை இனங்காண்பதற்கான பகுப்பாய்வு நடைமுறைகளின் பிரயோகம்
2. கணக்காய்வுச் சான்றுகளைச் சேகரிப்பதற்கான கணக்காய்வு நடைமுறைகளின் வகைகள்
3. ஆதனம், பொறி மற்றும் உபகரணம், மற்றும் உறவுமுறைத் தரப்பினர் தொடர்பில் ஆற்றப்பட வேண்டிய கணக்காய்வு நடைமுறைகள்
4. கணக்காய்வாளர் தனது அறிக்கையின் விடயப் பந்தியில் வலியுறுத்தல் ஒன்றை வெளிப்படுத்தக்கூடிய சந்தர்ப்பங்கள்

**பகுதி (a)**

இந்தப் பகுதியானது கணக்காய்வு நடைமுறைகளை ஆற்றும்போது விசேட கவனம் தேவைப்படும் பகுதிகளை இனங்காண்பது பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவைப் பரீட்சித்திருந்தது.

செயலாற்றுகை திருப்திகரமானதாக இருந்ததுடன் அதிகளவான பரீட்சார்த்திகள் ‘‘கணக்காய்வாள ருக்குத் தேவையான மேலதிக கணக்காய்வுச் சான்றை’’ இனங்கண்டிருந்தனர். எவ்வாறாயினும், மிகச் சில பரீட்சார்த்திகள் சம்பந்தமற்ற விடைகளை வழங்கியிருந்ததுடன் அவர்களால் வினாவில் கேட்கப்பட்டதை இனங்காண முடியவில்லை.

அவர்கள் கீழ்வருவன போன்ற சம்பந்தமற்ற விடைகளை வழங்கியிருந்தனர் :

- சகல கடன்பெற்றோரினதும் பெயர்கள்
- உள்ளகக் கட்டுப்பாட்டுப் பலவீனங்கள்
- கோவிட் 19 இன் தாக்கம்

**பகுதி (b)**

இங்கு, கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக் கொள்ளப் பயன்படுத்தப்பட வேண்டிய கணக்காய்வு விசாரணைகள் தவிர்ந்த ஏனைய கணக்காய்வு நடைமுறைகளின் மூன்று வகைகளை, ஒவ்வொன்றுக்கும் ஒரு உதாரணத்துடன் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. சில பரீட்சார்த்திகள் கணக்காய்வு நடைமுறையொன்றாக விசாரணைகள் என்பதை மீளவும் குறிப்பிட்டிருந்ததால் புள்ளிகள் எதனையும் பெற்றுக் கொள்ளவில்லை. இதுகூட வினாவில் கேட்கப்பட்டதை விளங்கிக் கொள்வதில் பரீட்சார்த்திகள் போதிய அறிவைக் கொண்டிருக்கவில்லை என்பதையே காட்டுகிறது. இது வினாவைச் சரியாக வாசிக்காமை மற்றும் வினாவின் மீது கவனத்தைச் செலுத்தாமை போன்றவற்றால் ஏற்பட்டிருக்கலாம்.

மேலும், பல பரீட்சார்த்திகள் அவர்கள் குறிப்பிட்ட நடைமுறைகளுக்கான சரியான உதாரணங்களை அடையாளங் கண்டிருக்கவில்லை. இது பரீட்சார்த்திகளிடம் நடைமுறை அனுபவம் குறைவாக இருந்ததால் ஏற்பட்டிருக்கலாம்.

**பகுதி (c) மற்றும் (d)**

இந்த 2 பகுதிகளும் பொருத்தமான கணக்காய்வு அபிப்பிராயமொன்றை உருவாக்குவதற்கு கணக்காய்வாளர் எவ்வாறு கணக்காய்வுச் சான்றினைப் பெற்றுக் கொள்கிறார் என்பது மீதான பரீட்சார்த்திகளின் அறிவைப் பரீட்சித்திருந்தது. இந்த வகையான வினாக்களுக்கு விடையளிப்பதற்கு, கணக்காய்வு மீதான நடைமுறை அனுபவம் வலுச் சேர்ப்பதாக அமையும். எவ்வாறாயினும், பாடப் புத்தகங்களைப் படிப்பதன் மூலம் பரீட்சார்த்திகள் அறிவைப் பெற்றுக்கொள்ள முடியும்.

**செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் காணப்படவில்லை.**

சில பரீட்சார்த்திகள் பரிசீலனை, அவதானித்தல் மற்றும் மதிப்பிடுதல் போன்ற கணக்காய்வு நடைமுறைகளின் வகைகளைக் குறிப்பிட்டிருந்தனர். கணிசமான எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் PPE கணக்காய்விலுள்ள தேய்மானம் பற்றி மாத்திரம் கலந்துரையாடியிருந்தனர். (தேய்மான வீதம், கணிப்பீட்டுத் துல்லியம், கணிப்பீட்டு முறை, தேய்மானப் பதிவு போன்றவை)

மோசமான செயலாற்றுகைக்கான பிரதான காரணம் போதியளவு நடைமுறை அனுபவம் காணப்படாமை ஆகும்.

**பகுதி (e)**

விடயப் பந்தியில் வலியுறுத்தல் ஒன்றை உள்ளடக்குவது அவசியமானது எனக் கணக்காய்வாளர் கருதக்கூடிய சூழ்நிலைகளுக்கான உதாரணங்களை விபரிக்குமாறு கேட்கப்பட்டது. எவ்வாறாயினும், 80 % இற்கும் அதிகமான பரீட்சார்த்திகள் இப்பகுதிக்கு விடையளிக்கத் தவறியிருந்தனர். ஏனெனில் பரீட்சிக்கப்பட்ட பகுதி தொடர்பில் அவர்களிடம் தேவையான விளக்கம் காணப்படாமை ஆகும்.

விடயப் பந்தியில் வலியுறுத்தல் ஒன்றை உள்ளடக்குவதற்கு கணக்காய்வாளர் கருத்திற் கொள்ளக்கூடிய சந்தர்ப்பங்களுக்கு உதாரணமாக சில சம்பந்தமற்ற விடைகளும் பரீட்சார்த்திகளால் வழங்கப்பட்டிருந்தன.

- குறிப்பான கணக்காய்வுப் பகுதி பற்றிய அடிப்படை அறிவை வழங்குவது
- முகாமையால் நோக்கெல்லையின் வரையறை
- உரிமத்தின் கட்டுப்பாட்டுக்கு அப்பாலான சந்தர்ப்பங்கள்

பரீட்சார்த்திகள் கணக்காய்வாளர் வெளிப்படுத்தும் மாற்றப்பட்ட அபிப்பிராயச் சந்தர்ப்பங்கள் பற்றிய தங்களது அறிவையும் கணக்காய்வாளர் அறிக்கையில் அதனை எவ்வாறு முன்வைப்பது என்பது பற்றிய அறிவையும் மேம்படுத்திக் கொள்ள வேண்டும்.

**வினாவின் இந்தப் பகுதிக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை நன்றாக இருந்தது.**

- - -

**<u>பரீட்சையில் செயலாற்றுகையை மேம்படுத்தும் பொருட்டு பரீட்சார்த்திகளின் ஆற்றல்சார் மட்டத்தை உயர்த்துவதற்கான பரிந்துரைகள்</u>:**

(1) பரீட்சார்த்திகள் பாடப் புத்தகத்தைப் படித்து, அதன் உள்ளடக்கங்களைப் புரிந்து கொள்ளுதல் வேண்டும்.

(2) இந்தப் பாடத்துடன் சம்பந்தப்பட்ட கட்டுரைகள், சஞ்சிகைகளை வாசிப்பதுடன் கணக்காய்வுடன் தொடர்புடைய வேறு விடயங்களையும் வாசித்தறிதல் வேண்டும்.

(3) பரீட்சார்த்திகள் செயல் வினைச் சொற்களின் வரைவிலக்கணங்களை விளங்கிக் கொள்வதுடன், வினாத்தாளின் இறுதியில் தரப்பட்டுள்ள செயல் வினைச் சொல் நிரலை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடையளிப்பதற்கு பயிற்சி பெறுதலும் வேண்டும்.

(4) கடந்த கால வினாத்தாள்களின் உள்ளடக்கங்களைக் கற்பதுடன், குறைந்தது கடந்த 2 – 3 ஆண்டுகளின் நடைபெற்ற பரீட்சைகளின் வினாத்தாள்களைச் செய்து பார்த்து வினாக்கள் அமைக்கப்பட்டுள்ள விதம் பற்றி விளங்கிக்கொள்ள முயற்சித்தல் வேண்டும்.

(5) பரீட்சார்த்திகள் வினாத்தாள்களில் தரப்பட்டுள்ள கோட்பாடுகள் மற்றும் பரீட்சையில் அதனைப் பிரயோகிப்பது பற்றிய பரீட்சகரின் எதிர்பார்ப்பு ஆகியவற்றுக்கிடையிலான தொடர்புடைமையை விளங்கிக்கொள்ளுதல் வேண்டும்.

(6) கடந்தகால வினாத்தாள்களில் பாடப் புத்தகத்திலுள்ள எந்தப் பகுதி பரீட்சிக்கப்பட்டுள்ளதோ அத்தகைய பகுதிகளை சிறு குறிப்புகளாக எழுதிக்கொண்டு படித்து விளங்கிக் கொள்ளுதல் வேண்டும்.

(7) பரீட்சார்த்திகள் வினாத்தாளுக்காக வழங்கப்பட்ட நேரத்தை அடிப்படையாகக் கொண்டு கடந்த கால வினாக்களுக்கு விடையளித்துப் பயிற்சி எடுத்தல் வேண்டும். இது பரீட்சையின்போது நேர முகாமைத்துவத்தை மேம்படுத்த உதவும்.

(8) பாடப் புத்தகத்தில் தரப்பட்ட ஒவ்வொரு பாட அத்தியாயத்திலிருந்தும் சிறு குறிப்புகளை எழுதிக் கொள்வதுடன் நேரம் கிடைக்கும் போதெல்லாம் பாடத்திட்டத்தின் உள்ளடக்கங்களை நினைவில் வைத்திருப்பதற்காக அவற்றைப் படிக்கவும்.

(9) பரீட்சார்த்திகள் விடைகளைத் தெளிவான கையெழுத்தில் எழுதுதல் வேண்டும்.

(10) பரீட்சார்த்திகள் வினாத்தாளுக்கு விடையளிப்பதற்கு முன், அதில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும்.

(11) பரீட்சார்த்திகள், வினாவை விளங்கிக்கொள்வதற்கும் வினாவில் கேட்கப்பட்டதற்கு பொருத்தமானதும் துல்லியமானதுமான விடைகளை வழங்குவதற்குமாக பரீட்சையின்போது தமது மனநிலையை தெளிவாகவும் சமநிலையாகவும் வைத்திருத்தல் வேண்டும்.

(12) பரீட்சார்த்திகள் வினாக்களுக்கு வழங்கப்பட்டுள்ள புள்ளிகளை அடிப்படையாகக் கொண்டு அவ்வினாவுக்கு விடையளிப்பதற்கான நேரத்தை ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்பதுடன், வினாத்தாளில் தரப்பட்ட சகல வினாக்களுக்கும் பயனுறுதிமிக்க வகையில் விடையளிப்பதற்கான இயலுமையுடன் இருத்தல் வேண்டும்.

(13) விடைத்தாளை ஒப்படைப்பதற்கு முன், கேட்கப்பட்ட அனைத்து வினாக்களுக்கும் விடை அளிக்கப்பட்டுள்ளதா, பொருத்தமானவாறு இலக்கமிடப்பட்டுள்ளதா என்பதை இருமுறை பரீட்சித்துக் கொள்ளவும்.

- * * * -